Cr.M.P.No.1336/2025
in CC.No.361/2019
PW1 – திருமதி.முனியம்மாள்
நாள் 19.02.2026, 12.35 P.M.

சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** என்னுடைய வீடு ஊருக்கு மேற்கே உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு பின்னால் வடக்கு பக்கமாக எதிரியின் வயல் உள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு பின்னால் காசிநாதன் வீடு உள்ளது என்றால் சரிதான். சம்பவ இடம் என் வீட்டிற்கு முன்பு நடந்தது என்றால் சரிதான். எனது மகளை இராமேஸ்வரத்தில் திருமணம் முடித்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். இந்த வழக்கின் சாட்சி வில்வக்கனி எங்கள் ஊரைச் சேர்ந்தவர் என்றால் சரிதான். வில்வக்கனியின் வீடு ஊருக்குள் உள்ளது என்றால் சரியல்ல. என் வீட்டிற்கு அருகில் உள்ளது. சம்பவம் நடந்த உடன் நாங்கள் நேரடியாக கீழக்கரை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். கீழக்கரை மருத்தவமனையில் வைத்து தான் போலீசார் என்னிடம் புகார் வாக்குமூலம் வாங்கினார்கள் என்றால் சரிதான். என்னுடைய கணவர் என்னுடன் தான் நான் சிகிச்சையில் இருக்கும் போது இருந்தார் என்றால் சரிதான்.

**2.** நானும், எனது கணவரும் கீழக்கரை அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சைக்காக இருந்தோம் என்றால் சரிதான். எனது கணவரை மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் மருத்தவமனைக்கு கொண்டு சென்றோம் என்றால் சரிதான். பின்னர் 1 வாரம் கழித்து என்னை மேல் சிகிச்சைக்காக இராமநாதபுரம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். கீழக்கரை அரசு மருத்துவமனையிலிருந்து 4 நாட்கள் கழித்து இராமநாதபுரம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நான் முதல் விசாரணையில் கூறியது போல் சம்பவத்தின் போது எனக்கு காயங்கள் ஏற்படவில்லை என்றாலும், எனக்கு ஏற்கனவே காலில் இருந்த காயத்திற்கு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தேன் என்றால் சரியல்ல.

**3.** ஏற்கனவே எனது மகள் குடும்ப பிரச்சனை சம்மந்தமாக எனது கணவருக்கும், எனது மருமகனுக்கும் இராமேஸ்வரம் வேர்க்கோடு கிராமத்தில் ஏற்பட்ட

மோதலின் போது எனது கணவருக்கு வலது முழங்காலில் ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி பொய்யான புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னை இவ்வழக்கு சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்த போது நான் மருத்துவ சிகிச்சையின் போது அளித்த எக்ஸ்ரே மற்றும் புகைப்படங்கள் போலீசார் விசாரணையின் போது ஒப்படைத்தேன் என்றால் சரிதான்.

**4.** சம்பவ இடத்தில் வேறு யாரும் இல்லை. இவ்வழக்கில் எதிரிகளுயை பாதையை விட்டுக்கொடுப்பார் என்ற நோக்கத்திற்காக எதிரி மீது பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், மற்றபடி எந்த காயங்கள் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. சம்பவம் உண்மையிலேயே நடைபெற்றிருநதால் நேரடியாக காவல் நிலையம் சென்று புகார் கொடுத்திருப்பேன். ஏற்கனவே எனது கணவருக்கு ஏற்பட்ட காயத்தை பயன்படுத்தி எனக்கு வீட்டின் பின்வாசல் தடுமாறி விழுந்த காயத்தை பயன்படுத்தி எதிரி மீது பொய்யாக புகார் அளித்தேன் என்றால் சரியல்ல.

**5.** எங்களுக்கும், நாகநாதன் குடும்பத்திற்கும் மட்டும் முன்பகை ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல.

ஓம்/S. சாது சிவ சுப்பிரமணியன்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி